# ஆண்டறிக்கை 1 9 8 1

தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையானது 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றத்தின் சட்ட ஒன்றினால் தாபிக்கப்பட்டது. (1981 ஆம் ஆண்டு செப்தம்பர் 2 ஆம் திகதிஅத்தாட்சிப்படுத்தப்பட்டது) இது நீர்வாழ் வளங்களை கூட்டி உளைத்தல், ஆராய்ச்சி செய்தல், அபிவிருத்தி செய்தல் முகாமை செய்தல் போன்ற முயற்சிகளுக்குப் பொறுப்பான முக்கிய தேசிய நிறுவனமாகும்.

இம் முகாமையின் தத்துவங்களும் கடமைகளும் அமைச்சரால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்களையும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சினதும் நிதி அமைச்சினதும் பிரதிநிதிகள் முகாமையின் பணிப்பாளர் நாயகம் ஆகிய பதவிவழி உத்தியோகத்தர்கள் நால்வரையும் கொண்டதான ஆளுநர் சபை ஒன்றிடம் அளிக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞான தொழில்நுட்பக் குழு என்றழைக்கப்படும் முகாமையின் நிலையத்குழு ஒன்றுக்கு இச்சட்டம் ஏற்பாடு செய்கிறது. இக்குழு முகாமையின் வருடாந்த வேலைத்திட்டங்களையும் வரவு செலவுத்திட்டத்தையும் பற்றிய தனது விதப்புரைகளை ஆளுநர் சபைக்கு வழங்குவதோடு அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தையும் உன்னித்துக் கவனித்து வரும்.

இச்சட்டம் பின்வருவனவற்றுக்காக தேசிய நீரியல்வள முகாமைச் சபை ஒன்றுக்கும் ஏற்பாடு செய்கின்றது.

(அ) இலங்கையின் நீர்வாழ் வளங்களினது முகாமை அபிவிருத்தி தொடர்பான நிலையங்களில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் விதப்புரை செய்வதற்கும்.

(ஆ) வளங்களின் முகாமை அபிவிருத்தி ஆராய்ச்சித் திட்டங்களை தயாரித்து தொடர்ச்சியான மீளாய்வுக்கு உள்ளாக்குதல்.

முகாமையின் ஆளுநர் சபை 7 கூட்டங்களை நடத்தியது. அதன் முதற் கூட்டம் 1981 செப்தம்பர் 23 ஆம் திகதி நடந்தேறியது.

1981 செப்தம்பர் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியின்போது ஆளுநர் சபையின் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் சில பின்வருபனவாகும்.

(1) பதவியினரை ஆட்சேர்ப்பதும் கடற்றொழில் அமைச்சின் மீன் தொழில்நுட்பவியல் நிறுவகத்திலும் ஆராய்ச்சிப் பிரிவிலும், வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு முகாமையில் முறைப்படியான தொழிலை வழங்குதல்.

(2) ஆட்சேர்ப்புக்கான திட்டங்களை வகுத்தல்.

(3) நீர்வாழ்வளங்கள் தொடர்பான முயற்சிகளின் பல்வேறு பரப்புகளினதும் ஆண்டு மீளாய்வை மேற்கொண்டு, கொள்கை வகுப்போருக்கு நிலையான மூலமாக உதவும் பொருட்டு அதை ஆண்டு மலராகத் தயாரித்தல்.

(4) சமுத்திரவியலின் இந்திய தேசிய நிறுவகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தியக்கலங்களில் தே.நீ.வ.மு. விஞ்ஞானிகள் அவர்கள் உதவியுடன் வேலை செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்தல்.

சி-13 (பி)/நாநா/81

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்,
டொரிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, இலங்கை.
1984 – 03–22.

தவிசாளர்,
தேசிய நீரியல்வள ஆராய்ச்சி
அபிவிருத்தி முகாமை.

செப்தம்பர் 16ஆம் தேதி தொடக்கம் 1981
திசெம்பர் 31ஆம் தேதிவரையுள்ள காலப்
பகுதிக்கான, தேசிய நீரியல்வள ஆராய்ச்சி
அபிவிருத்தி முகாமையின் கணக்குகள் மீதான,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
அரசியலமைப்பு 154(6) ஆம் உறுப்புரையின்
படியான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

எனது அவதானிப்புகள் அடங்கிய அறிக்கையானது இத்துடனனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்.
கணக்காய்வாளர் அதிபதி

படி – செ/ கடற்றொழில்.
செ/ நிதி, திட்டமிடல்.

சி-13 (பி) /நாரா /81

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்,
டொரிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, இலங்கை,
1984 -03- 22.

தவிசாளர்,
தேசிய நீரியல்வள ஆராய்ச்சி
அபிவிருத்தி முகாமை.

செப்தம்பர் 16ஆம் தேதி தொடக்கம் 1981 திசெம்பர் 31ஆம் தேதி வரையுள்ள காலப் பகுதிக்கான, தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் கணக்குகள் மீதான கணக்காய்வு அறிக்கை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 154(1) ஆம் உறுப்புரையைப் பின்பற்றி, செப்தம்பர் 16ஆம் தேதி தொடக்கம் 1981 திசெம்பர் 31ஆம் தேதி வரையுள்ள காலப்பகுதிக்கான தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் கணக்குகளின் கணக்காய்வானது என்னால் மேற்கொள்ளப்பட்டது.

கணக்காய்விலிருந்தெழுந்த எனது அவதானிப்புகளாவன, பின்வரும் பந்திகளில் காணப்படுகின்றன :-

1.1 முன்னுரை

தேசிய நீரியல்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமையானது, 1981 ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டது. அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்களையும், நான்கு பதவிவழி உறுப்பினர்களையும் கொண்ட, யாவரும் இரு வருடங்களுக்குப் பதவி வகிப்பவர்களான, ஆளும் சபையொன்றிடம் முகாமையின் தத்துவங்களும் கடமைகளும் அளிக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் ஓராம் பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம், முகாமை செயற்பட ஆரம்பித்த தினமான, 1981 செப்தம்பர் 16ஆம் தேதியன்று முதலாவது ஆளும் சபை உறுப்பினர்களது பதவிக்காலம் ஆரம்பமாயிற்று.

...... -2-

சபையின் நிருவாகப் பணிகளை நிறைவேற்றுவதற்கென அமைச்சர் பணிப்பாளர் நாயகம் ஒருவரையும், சபைச் செயலாளர் ஒருவரையும் நியமனம் செய்வதற்கு சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சருக்கு ஆலோசனை கூறுவதற்கும் விதப்புரைகளைச் செய்வதற்குமென தேசிய நீரியல்வள முகாமை மற்றமொன்றையும், ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான உத்தேசங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் மதிப்பிடுவதற்கும், அத்துடன் சபைக்கு விதப்புரைகளைச் செய்வதற்குமென விஞ்ஞான தொழில்நுட்பக்குழு என்றழைக்கப்படும் முகாமையின் நிலையியற் குழுவொன்றையும் தாபிப்பதற்கும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

## 1.2 கணக்குகள் ஒப்படைப்பு

செப்தம்பர் 18ஆம் தேதி தொடக்கம் 1981 திசெம்பர் 31ஆம் தேதி வரையுள்ள காலப்பகுதிக்கான கணக்குகளுடன் பணிப்பாளர் நாயகம் கடிதம் ஒன்றை எனக்கு 1982 செப்தம்பர் 10ஆம் திகதியன்று அனுப்பி வைத்திருந்தார். இருப்பினும், கணக்குகள் கையொப்பமிடப்படவுமில்லை, அத்துடன் காலப்பகுதி எவையேனும் குறிப்பிடப்படவுமில்லை.

அதன்பின்பு, ஒக்தோபர் 16ஆம் தேதி தொடக்கம் 1981 திசெம்பர் 31ஆம் தேதி வரையுள்ள காலப்பகுதியை உள்ளடக்கி, முறையே கையொப்ப மிடப்பட்டதும் 1983 சனவரி 25ஆம் தேதியிடப்பட்டதுமான இன்னுமொரு கணக்குகள் தொகுதி கிடைக்கப்பெற்றது.

இதுபற்றி மேலும் தெளிவுபடுத்தும்படி கேட்கப்பட்டபோது, ஆளும் சபையின் செயலாளர், 1983 செப்தம்பர் 9ஆம் தேதிய தனது கடிதம் வாயிலாக "முகாமையின் ஆளும் சபையின் ஆரம்பத்திற்கும் அதன் செயற் பாடுகளின் ஆரம்பத்திற்குமான நியமிக்கப்பட்ட திகதி 1981 செப்தம்பர் 16 என மாண்புமிகு கடற்றொழில் அமைச்சர் 157/5 ஆம் இலக்க, 1981 செப்தம்பர் 9 ஆம் தேதிய அதிவிசேட வர்த்தமானிமூலம் வெளிப்படுத்தி யுள்ளார். குறிப்பிடப்பட்ட வர்த்தமானியில் வெளிப்படுத்தப்பட்டதான 1981 செப்தம்பர் 16ஆம் தேதியைத் தவிர்ந்த தேதி எதுவும் மாண்புமிகு கடற்றொழில் அமைச்சரின் அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்காது. மேற்சொல்லப்பட்ட காரணத்துக்காக கணக்கீட்டுக் காலப்பகுதியானது 1981 செப்தம்பர் 16ஆம் தேதி தொடக்கம் 1981 திசெம்பர் 31ஆம் தேதி முடிவுவரை எனக்கருதப்படலாம்" என்று எனக்கு அறிவித்திருந்தார்.

.........3/-

## 2. கணக்குகள்

### 2.1 அபிப்பிராயம்

கீழேயுள்ள 2.5 என்னும் பந்தியில் காணப்படும் கருத்துரைகள் காரணமாக, சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளாவன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில் திருப்தி கரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது பற்றி அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க எனக்கு இயலாதிருக்கின்றது.

### 2.2 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி, செப்தம்பர் 16ஆம் தேதி தொடக்கம் 1981 டிசெம்பர் 31ஆம் தேதி வரையுள்ள காலப்பகுதிக்கான முகாமையின் செயற்பாட்டின் விளைவாக 2,35,067 ரூபா கொண்ட செலவு நீங்கிய மிகை வருமானம் ஏற்பட்டுள்ளது. பின்வரும் கூற்று, மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியின் நிதிப் பெறுபேறுகளைக் காட்டுகின்றது.

| | செப்தம்பர் 16ஆம் தேதி தொடக்கம் 1981 டிசெம்பர் 31ஆம் தேதி வரையுள்ள காலப்பகுதி | |
|---|---|---|
| | ரூ | ரூ |
| திறைசேரியிலிருந்து பெறுகைகள் | – | 9,53,000 |
| கழிக்குக – செலவினங்கள் | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 4,15,728 | |
| சபைச் செலவுகள் | 12,948 | |
| கட்டிடங்கள், வாகனங்கள், பொறித்தொகுதிகள், தளபாடங்கள் முதலியனவற்றைப் பேணுதல் | 1,61,336 | |
| மின்சாரம் | 60,000 | |
| பிற செலவுகள் | 67,921 | 7,17,933 |
| செலவினம் நீங்கிய மிகைவருமானம் | | 2,35,067 |

## 2.3 நிதி அமைப்பு

1981 டிசெம்பர் 31ஆந் தேதியன்றிருந்தவாறான முகாமையின் நிதி அமைப்பு பின்வருமாறாகும்:—

| | | |
|---|---|---|
| **மூலவளங்கள்** | **ரூபா** | |
| அரசாங்க உதவுதொகை | 61,81,000 | |
| செலவு நீங்கிய மிகை வருமானம் | 2,35,067 | |
| | 64,16,067 | |

| | | |
|---|---|---|
| **பயனுக்கம்** | | |
| கொள்விலையில் நிலையான சொத்துக்கள் | | 19,290 |
| நடப்புச் சொத்துக்கள் | 65,42,614 | |
| கழிக்குக— நடப்புப் பொறுப்புக்கள் | 1,45,837 | 63,96,777 |
| | | 64,16,067 |

## 2.4 நிதிகளின் மூலமும் அவற்றின் பிரயோகமும்

மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியின்போதான முகாமை நிதிகளின் மூலத்தையும் அவற்றின் பிரயோகத்தையும் பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| | | |
|---|---|---|
| **மூலம்** — அரசாங்க உதவுதொகை | | 61,81,000 |
| செலவு நீங்கிய மிகை வருமானம் | | 2,35,067 |
| | | 64,16,067 |
| **பிரயோகம்** | | |
| நிலையான சொத்துக்கள் கொள்வனவு | | 19,290 |
| கீழே நிரல்படுத்தப்பட்டவாறாக செயற்பாட்டு மூலதனம் | | 63,96,777 |
| கையிலும் வங்கியிலும் உள்ள ரொக்கம் | 64,81,139 | |
| கடனாளிகள் | 14,600 | |
| வழங்குநருக்கு முற்பணம் | 46,875 | |
| கடன்கொடுநர்கள் | (4,110) | |
| சேர்ந்தசெலவுகள் | (1,41,727) | 63,96,777 |

## 2.5 கணக்குகள் மீதான கருத்துரைகள்

### 2.5.1 அமைச்சிலிருந்து சொத்துக்கள் கைமாற்றம்

கடற்றொழில் அமைச்சின் மீன் தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்கும் ஆராய்ச்சிப் பகுதிக்கும் முன்பு சேர்மதியாகவிருந்த சொத்துக்கள் யாவையும் முகாமை உடைமை கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இருப்பினும், இச்சொத்துக்களை முகாமையிடம் கையளித்தது பற்றி இவ்வறிக்கை எழுதப்பட்ட திகதிவரை சட்டத்தின் 35 ஆம் பிரிவிற்கமைய அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. 842ஆம் இலக்கத்தையும் 1978 டிசெம்பர் 19ஆம் தேதியையும் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இச்சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

### 2.5.2 முகாமையின் நிதி

பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட பணப் பெறுகைக்கும், செயற்பாட்டு வருமானம், கொடைகள், நன்கொடைகள் முதலியனவற்றுக்கும், மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் கொடுப்பனவுக்குமென முகாமை அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டுமென்று சட்டத்தின் 29ஆம் பிரிவு கூறுகிறது.

1981 டிசெம்பர் 31ஆம் தேதிவரை பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க கொடையான ரூபா 71,34,000 கொண்ட மொத்தத் தொகையில் முகாமை 9,53,000 ரூபாவை வருமானமாகவும் மீதித்தொகையான 61,81,000 ரூபாவை அரசாங்க உதவு தொகையாகவும் கருதியுள்ளது. இவ்வாறு கருதியமைக்கான காரணத்தை கணக்காய்வில் கண்டறிந்துகொள்ள முடியாதிருந்தது.

சட்டத்தின் 30ஆம் பிரிவிற்கமைய நிதியிலிருந்து பணத்தைமீள எடுப்பதற்கும் அதை முதலீடு செய்வதற்குமென சபை ஏதேனும் ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கவில்லை. இருப்பினும், இடைக்காலப்பகுதியின்போது நிதிப் பிரமாணங்களையும் தாபனக் கோவை விதிகளையும் பின்பற்றுவதென 1981 நவம்பர் 20ஆம் தேதியன்று நடைபெற்ற சபையின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2.5.3 பேரேடு பேணுதல்

(அ) 1981 டிசெம்பர் 31ஆம் திகதியன்றிருந்தவாறாக, பேரேடு சமநிலைப்படுத்தப்படவில்லை அத்துடன் பரீட்சை மீதி கண்டுபிடிக்கப்படவுமில்லை.

(ஆ) பேரேட்டில் காணப்படும் மீதிகளாவன கணக்குடன் இணைக்கப்பட்ட கூற்றில் தெரிவிக்கப்பட்டவற்றிலிருந்து வேறுபடுவதால் பின்வரும் கணக்குகளை திருப்திகரமாக உறுதிப்படுத்தவோ கணக்காய்வில் ஏற்றுக்கொள்ளவோ முடியாதுள்ளது.

| கணக்கு | பேரேட்டின்படி மீதி | கூற்றின்படி மீதி |
|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 3,44,417 | 3,42,659 |
| மேலதிகநேரம் | 5,642 | 5,709 |
| சேர்ந்த செலவுகள் | 4,264 | 1,41,727 |

2.5.4 அட்டவணைகள்

கணக்குகளில் காணப்படும் பின்வரும் விடயங்கள் தொடர்பான விபரமான அட்டவணைகள் கணக்காய்வுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி |
|---|---|
| கடனாளிகள் - தொழிலாளர்கள் | 14,600 |
| வழங்குநருக்கு முற்பணம் | 46,875 |
| கடன்கொடுநர்கள் | 4,110 |

2.5.5 கடனாளிகளினதும் கடன்கொடுநர்களினதும் மீதிகளை உறுதிப்படுத்தல்

கணக்குகளில் காணப்படும் கடனாளிகளினதும் கடன் கொடுநர்களினதும் மீதிகள் தொடர்பாக உறுதிப்படுத்தல் எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

2.5.6 சபை உறுப்பினர்களுக்கான ஊதியம்

ஆளும் சபை உறுப்பினர்களுக்கு கூட்டமொன்றுக்கு ரூபா 100/- வீதம் படியொன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த ஊதியமானது, சட்டத்தின் 20 ஆம் பிரிவிற்கமைய அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அதிகரித்த படிகளுக்கான ஒரு வேண்டுகோளுக்கு மறுமொழியாக கடற்றொழில் அமைச்சரிடமிருந்து 1982 ஏப்பிரல் மாதத்தில் கிடைக்கப் பெற்ற கடிதமொன்றை பணிப்பாளர் நாயகம் எனக்கு குறிப்பிட்டுகாட்டி அமைச்சரால் 100/- ரூபா அங்கீகரிக்கப்பட்டதெனக் கூறுவதாக எனக்கு அறிவித்தார். ஆனால், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தடையின்றிக் கிடைக்கக்கூடியனவாக்கப்படவில்லை.

2.5.7 அமைச்சுப் பணியாட்களுக்குக் கொடுப்பனவுகள்

கடற்றொழில் அமைச்சைச் சார்ந்த நான்கு உத்தியோகத்தர்களுக்கு 1981 செப்தம்பர் மாதத்திலிருந்து 250/- ரூபாவிலிருந்து 750/- ரூபாவரை பரவும் வீதங்களில் மாதாந்தப் படிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வுத்தியோகத்தர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கொடுப்பனவுகளைச் செய்வதற்குமான தாபனப் பணிப்பாளரின் அதிகாரத்தை கணக்காய்வுச் சரிபார்த்தலுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படவில்லை.

2.5.8 காப்புறுதி

நெருப்பு முதலியன போன்ற இடர்களுக்கு எதிராக முகாமையின் சொத்துக்கள் காப்புறுதி செய்யப்படவில்லை.

2.5.9 ஆணையாளர்

கடற்றொழில் அமைச்சின் மீன் தொழில்நுட்பவியல் நிறுவகத்திலும் ஆராய்ச்சிப் பிரிவிலும் சேவையிலமர்த்தப்பட்டிருந்த ஆணையாளர் 1981 ஒக்டோபர் மாதத்திலிருந்து முகாமையின் சேவைக்குள் ஒருங்கிணைக்கப்பட்டதாக கணக்காய்வில் தெரியவந்தது. இருப்பினும், பணியாட்களை ஒருங்கிணைப்பது தொடர்பாக சட்டத்தின் 24 ஆம்பிரிவிலும் தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவிலும் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைகள்

பின்பற்றப்பட்டதெனக் குறிப்பிடும் சான்றுகள் எதுவும் கிடைக்கக் கூடியனவாக்கப்படவில்லை. இதன்காரணமாக, சம்பளங்களும் கூலிகளும் மீதான ரூபா 3,80,159 கொண்ட செலவினமானது திருப்திகரமாக உறுதிப்படுத்தப் படவோ கணக்காய்வில் ஏற்றுக்கொள்ளப்படவோ முடியாதுள்ளது.

பணிப்பாளர் நாயகம் 1983 நவம்பர் மாதத்தில் எனக்கு பின்வருமாறு அறிவித்திருந்தார்:-

"இரு பகுதிகளிலும் அதாவது மீன் தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி என்பனவற்றிலிருந்த பணியாட்கள் தேசிய நீரியல்வள முகாமைக்கு சேவைமாற்றம் செய்யப்பட்டார்கள். அத்துடன் இவ்வாறாக அவர்கள் தேசிய நீரியல்வள முகாமைப் பணியாட்களின் மையத்கருவாகவும் அமைந்துள்ளார்கள். சேவை மாற்றம் செய்யப்பட்டதன் பின்பு பதவிகளை ஒழிப்பதற்கென பொதுநிருவாக அமைச்சுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும், அவர்களின் பதவிகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் இறுதியாக்கப்படுவதற்கு முன்னதாக முகாமையின் கீழான தொழிலுக்கான நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக அவர்களுக்குத் தொழில் வழங்கப்பட்டது. 1982 பெப்ரவரி 1ஆம் திகதியிலிருந்து பதவிகள் ஒழிக்கப்பட்டதையடுத்து சகல உத்தியோகத்தர்களும் அவர்களது நியமனங்களை ஏற்றுக்கொண்டார்கள். உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டார்களேயன்றி ஒருங்கிணைக்கப்படவில்லை என்பதனை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். எனவே சட்டத்தின் 24ஆம் பிரிவில் விதித்துரைக் கப்பட்ட நடவடிக்கைமுறைக்கான அவசியம் எழவில்லை"

2.5.10 பிற குறைபாடுகள்

(அ) கட்டிடங்களைப் பேணுதல்

இவ்விடயத்தின்கீழ் காட்டப்பட்டுள்ள செலவினமானது மூலதனமாக்கப் பட்டிருக்க வேண்டிய மூலதனப் பொருட்களின் கொள்வனவுச் செலவான ரூபா 1,36,213 கொண்ட தொகையையும் உள்ளடக்கியுள்ளது.

(ஆ) பெற்றுக்கொள்ளப்படாத சம்பளங்கள்

பெற்றுக்கொள்ளப்படாத சம்பளத் தொகையான ரூபா 1,758 தொடர்பில் கணக்குகளில் ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

3. நிதிசார், தொழிற்பாட்டு மீளாய்வு.

கணக்குகளின்படி, ஆரம்பதினத்திலிருந்து அதாவது 1981 செப்டம்பர் 16ஆம் திகதி தொடக்கம் 1981 டிசெம்பர் 31ஆம் திகதிவரை ஏறத்தாழ மூன்றரை மாத காலத்துக்கு, செலவு நீங்கிய மிகை வருமானமாக ரூபா 2,35,067 தொகையைக் முகாமை கொண்டிருந்தது. அரசாங்க மொத்தக் கொடையான 71,34,000 ரூபாவிலிருந்து 9,53,000 ரூபாவை முதாமை வருமானமாகக் கருதி, மேற்சொல்லப்பட்ட நிதிப்பெறுபேறுகளை எய்தியுள்ளது.

மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியின்போது முகாமை பெரும்பாலும் தாபன நிருவாக விடயங்களிலேயே ஈடுபட்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(1) அதிகாரம் கையளித்தல்

நிதியின் கட்டுப்பாட்டுக்கும் முகாமைப்பாட்டுக்குமான முகாமையின் அலுவலர்களுக்கு சபை அதன் அதிகாரத்தையும் பணிகளையும் விதிமுறைப்படி கையளித்தமைக்கான சான்றெதுவும் இருக்கவில்லை.

(11) பிணைப்பொறுப்பு

பணம், காசோலைகள், களஞ்சியங்கள் மற்றும் சொத்துக்கள் என்பனவற்றைக் கையாளும் அலுவலர்களை பிணைப்பொறுப்பு வழங்கும்படி முகாமை கேட்கவில்லை.

(111) உள்ளகக் கட்டுப்பாடு

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது, பணம் மற்றும் சொத்துக்கள், கணக்கீட்டு ஆவணங்களையும் பதிவேடுகளையும் தயாரித்தலும் பேணுதலும், வருட இறுதியின் பொறுப்புக்களைக் கண்டறிதல் என்பன தொடர்பில் உறுதியற்றதாகக் காணப்பட்டது. நடவடிக்கைமுறைகள் யாவும் விபரமாகத் திட்டமிடப்பட்டு முகாமையிலுள்ள பல்வேறு ஆளணியினருக்கும் பணிகள் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை. கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைவுபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:-

(அ) பணம்

1981 ஒக்தோபர் மாதத்துக்கான கோரப்படாத சம்பளங்கள் கொடுப்பனவு உத்தியோகத்தரிடம் 2 மாதங்களாக இருந்துள்ளன, அத்துடன் வருடமுடிவில் உள்ளவாறான சில்லறைப்பண மீதிகள் மீளப்புச் செய்யப்படவுமில்லை அல்லது பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் சரிபிழை பார்க்கப்படவுமில்லை. விசேட தேவைகளின் நிமித்தம் வழங்கப்பட்ட முற்பணங்கள் 1½ மாதங்களுக்கு மேலாக தீர்க்கப்படாதிருந்துள்ளன. விஜைப்பரிக்கப்பட்ட மாத்தியத்தில் சில்லறைப்பணக் கட்டுகள் அனேகம் வழங்கப்பட்டுள்ளன, ஆனால் உச்ச எல்லை என்ன அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ளது என்பது கணக்காய்வுச் சோதனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை. முகாமையினது உள்ளபடியான பணத் தேவைகளை கண்டறியாது கட்டுநிதிகள் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் இதன் பயனாக கட்டுநிதியின் பெரும்பகுதி வருடமுடிவின்போது செலவுசெய்யப்படாமல் இருந்துள்ளது.

(ஆ) பிற சொத்துக்கள்

முறையான கட்டுப்பாட்டையும் வினைத்திறன் சார்ந்த பயனுக்கத்தையும் உறுதிப்படுத்தும்பொருட்டு நிலையான சொத்துக்களின் பதிவேடுகளும் பொருட்பதிவுகளும் பேணப்படவில்லை. மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியின்போது ஐந்தொகைத் திகதியன்றிருந்த சொத்துக்கள் உருப்படி சரிபார்க்கப்படவில்லை.

(இ) கணக்கீட்டு ஆவணங்களையும் பதிவேடுகளையும் தயாரித்தலும் பேணுதலும்

கொடுப்பனவு செய்யப்படுவதற்கு முன்னதாக, கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள், செலவினம் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தரால் சரிபார்க்கப்படவில்லை. செலவினத்துக்கான அதிகாரத்தைக் காண்பிக்கும் குறிப்பு இலக்கங்களும், காசுப் புத்தகங்களினதும் பேரேட்டுகளினதும் பக்க இலக்கங்களும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளில் குறிப்பிட்டிருக்கப்படவில்லை. பதிவேட்டுப்பொருட்கள் தொடர்பான கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளாவன, பிற பதிவேடுகளைப் பார்க்காமல் பரிசோதனையை மேற்கொள்ள உதவும் வகையில் பொருட்பதிவேட்டுச் சான்றிதழ்களைக் கொண்டிருக்கவில்லை. தேவைப் பட்டியல்கள், கிடைத்தப்பெற்ற பொருட்களின் குறிப்புகள், வழங்கப்பட்ட பொருட்களின் குறிப்புகள் போன்றவாறான ஆவணங்கள் அறிமுகப்படுத்தப்படவில்லை. பெரும்பாலான கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டுகள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

பணக் கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்வதற்கும் பாகுபாடு செய்வதற்கும் முறையான காசுப் புத்தகம் உபயோகிக்கப்படவில்லை. வங்கி கணக்கிணக்கக்கூற்றுகள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஈ) சுறுகச்சேர்ந்த செலவுகள்

வருடமுடிவிலுள்ளவாறாக சுறுகச்சேர்ந்த செலவுகள், கணக்குப் புத்தகங்கள் எவற்றிலாவது அவை பதிவு செய்யப்படாது, வரவுசெலவுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. வருட முடிவிலுள்ளவாறான பொறுப்புகள் யாவும் முகாமையால் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டதென்பதற்கான சான்றெதுவும் இருக்கவில்லை.

ஒப்பம்.
கணக்காய்வாளர் அதிபதி.

பிடி — செயலாளர்/ கடற்றொழில்.
செயலாளர்/ நிதி, திட்டமிடல்.

## தேசய நீரியல்வள முகாமை

## 1981 திசெம்பர் 31ஆம் திகதியன்றிருந்தவாறான ஐந்தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசாங்க உதவுதொகை | | 61,81,000.00 | தளபாடம் | 17,700.00 | 17,730.00 |
| | | | புத்தகங்களும் சஞ்சிகைகளும் | 1,500.00 | 1,560.00 |
| செலவு நீங்கிய மிகை வருமானம் | | 2,35,067.01 | | | |
| **நடப்புப் பொறுப்புகள்** | | | **நடப்புச் சொத்துக்கள்** | | |
| கடன் கொடுநர்கள் | 4110.00 | | கடனாளிகள் – ஊழியர்கள் | 14,600.00 | |
| சுறுகச் சேர்ந்த செலவுகள் | 141726.79 | 1,45,836.79 | வழங்கல்கள் | 46,875.00 | |
| | | | வங்கியிலி | 6479,078.40 | |
| | | | ரொக்கம் | 2,060.40 | 65,42,613.80 |
| | | 65,61,903.80 | | | 65,61,903.80 |

## தேசிய நீரியல்வள முகாமை

1981 செப்தம்பர் 16ஆம் தேதி தொடக்கம் 1981 திசெம்பர் 31ஆம் தேதிவரையுள்ள காலப்பகுதிக்கான

### வரவுசெலவுக் கூற்று

| செலவினம் | | பெறுகைகள் | |
|---|---|---|---|
| 1. பொதுநிருவாகம் | 4,74,610.74 | திறைசேரியிலிருந்து பெறுகை | 9,53,000.00 |
| 2. மேலதிகமும் பேணலும் | 2,30,374.75 | | |
| 3. சபைச் செலவுகள் | 12,947.50 | | |
| 4. செலவு நீங்கிய மிகை வருமானம் | 2,35,067.01 | | |
| | 9,53,000.00 | | 9,53,000.00 |

## கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையைப் பின்பற்றிய எனது பணிப்புரையின்கீழ் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் செப்தம்பர் 16ஆம் தேதி தொடக்கம் 1981 திசெம்பர் 31ஆம் தேதிவரையுள்ள காலப் பகுதிக்கான கணக்குகள், கணக்காய்வு செய்யப்பட்டன.

இக்கணக்குகள் மீதான எனது அவதானிப்புகள் முகாமையின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்ட இதே தேதி கொண்டதான எனது அறிக்கையில் அடங்கியுள்ளன.

ஒப்பம். டபிள்யு. காமினி ஆயா.
கணக்காய்வாளர் அதிபதி

கணக்காய்வாளர் அலுவலகம்,
கொழும்பு - 7,
1984-03-22.